N THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS.. No. | : | **31/2019** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | K.ராஜேந்திரன் | CASTE | : | |
| S/O | கருப்பையா சேர்வை | RELIGION | : | இந்து |
| VILLAGE | திருவாலவாயநல்லூர் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 67 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28.01.2026**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. வழக்குச்சொத்து 1,2 பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து என்று நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தின் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட பங்குப்பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, 8 செண்டு ஒதுக்கப்பட்டது. வழக்கில் சொல்வதுபோல் 12.03.2018 ம் தேதி 70,000/–மும் அந்த தேதியிலிருந்து ஒரு வருடத்தில் மீதத்தொகையான ரூபாய் 25,000 த்தையும் 1, 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கிற்காகத்தான் வா.சா.ஆ.1 ஆவணங்களில் பொய்யாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. வழக்குச்சொத்தின் சுவாதீனம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் மீதத்தொகையை பெற்றுக்கொண்டு 1, 2 பிரதிவாதிகள் பத்திரம் பதிந்து தருவதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. கண்ணாமணியிடம் எந்த தேதியிலிருந்து தரைவாடகை பெறப்படுகிறது என்றால் தேதி தெரியாது, ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக வருடக்கணக்கில் 1, 2 பிரதிவாதிகள் வாடகை வசூலித்தார்கள், ஒப்பந்தம் போட்ட பின்பாக நான் வாடகையை வசூலித்து வருகிறேன். தரை வாடகை ஆவணம் வழக்கிற்காக நானாக பொய்யாக உற்பத்தி செய்தது என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.3, 4– தரை வாடகை சம்பந்தமான வாடகை நோட்டு, வாடகை ஒப்பந்த ஆவணம் ஆகியவை பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதுபோல் 3, 4 பிரதிவாதிகள் நான் ஒப்பந்தம் போட்ட சமயத்தில் பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

மீதத்தொகையை நான் 1, 2 பிரதிவாதிகளிடம் கொடுக்கும் சமயத்தில் வழக்குச்சொத்தில் 3, 4 பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4. 3, 4 பிரதிவாதிகளுக்கு வழக்குச்சொத்தில் அவர்கள் பிரச்சனை செய்வதாக அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். அவர்கள் சொத்துக்கு சம்பந்தமில்லாத நபர்கள். ஊரணிப்பகுதியில் மக்களுக்கு இடையூறாக நீளமான கற்களை நான் நட்டபோதுதான் மக்கள் எனக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்றாலும் அதன்பிறகு வருவாய் துறை அதிகாரிகள் அங்குவந்து என்னைத்தடுத்தார்கள் என்றாலும் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் வழக்கிற்காக பொய்யாக உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு வழக்குச்சொத்து எந்தவகையில் பாத்தியப்பட்டது என்று தெரியாமல் நான் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.1 பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து சம்பந்தமாக எனது வழக்கறிஞரின் மனைவிக்கு பொதுஅதிகாரம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.1 பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்கள் பொய்யாக தயார் செய்யப்பட்டவை என்றாலும் அவற்றிற்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து கிராமத்திற்கு ஊரணி புறம்போக்கு என்று தாக்கலாகிஉள்ளது என்றால் சரியல்ல, யூடிஆர் திட்டத்தில் அவ்வாறு தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.